மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.N.ரேணுகா., பி.ஏ., பி.எல்

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்

2024 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை

இடை மனு எண்.4/2024

அசல் வழக்கு எண்.192/2017

1. மருதகுட்டி ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. கா.சின்னகுட்டி (இறப்பு)
2. செல்லம்மாள்
3. மனோஜ் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 11.09.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.முத்துக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.கோபாலகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

மனுவில் உள்ள திருத்த விபரத்தில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களை அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய கோரி கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>

1.1). மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது, சொத்து

விபரத்தில் இரண்டாவது அட்டவணையில் சொத்து விபரம் தவறாக குறிப்பிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. எனவே மேற்படி அசல் வழக்கு எண்.192/2017 ல் இரண்டாம் அட்டவணையில் உரிய திருத்தங்கள் செய்யும் பொருட்டு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே அனுமதித்து உத்தரவிடப்பட்டது.

1.2). வழக்கில் மனுதாரர்/வாதி வழக்கு சொத்தின் II வது அட்டவணை சொத்திற்கு உரிமையாளராக விளம்புகை செய்யக்கோரி பரிகாரம் கேட்டுள்ளார். மேற்படி பரிகாரத்தை பொறுத்தவரை இவ்வழக்கின் சொத்தானது மனுதாரர்/வாதி தகப்பனாரான திரு.அய்யாக்கவுண்டர் என்பவருக்கு 10.07.1957 ம் நாளிட்டு சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1054/1957 ம் எண்ணிட்ட ஆவணம் மூலம் சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்டதாகும்.

1.3). மேலும் மனுதாரர்/வாதி தகப்பனாரான திரு.அய்யாக்கவுண்டர் அவர்களுக்கு மனுதாரர்/வாதி மற்றும் அவருடைய சகோதரிகளான ராமாத்தாள் மற்றும் பழனியம்மாள் ஆகிய மூவரும் சட்டப்படியான வாரிசுகளாவார்கள்.

1.4). மேலும் மனுதாரர்/வாதியின் தாயார் இறப்பதற்கு முன்பே அவரது தகப்பனார் திரு.அய்யாக்கவுண்டர் கடந்த 09.01.2005 ம் தேதியன்று காலமாகிவிட்டார். பின்னிட்டு மனுதாரர்/வாதியின் தாயாரும் கடந்த 26.03.2012 ம் தேதியன்று காலமாகிவிட்டார். இருந்தபோதும் அவசர நிமித்தமும் எதிர்மனுவாதிகளின் ஆக்கிரமிப்புகள் மற்றும் தொடர் தொந்திரவுகளால் மனுதாரர்/வாதி மட்டுமே இந்த வழக்கினை உரிய பரிகாரம் கோரி தாக்கல் செய்துவிட்டார்.

1.5). மேலும் மேற்படி மனுச்சொத்தானது தற்போது மனுதாரர்/வாதி சுவாதீனத்தில் மட்டுமே உள்ளது. மேற்படி சொத்தானது மனுதாரர்/வாதி தகப்பனார் காலமானதிற்கு பின்னிட்டு எந்தவித ஏற்பாடும் செய்யாமல் கூட்டு கூட்டுசுவாதீனத்திலேயே இருந்து வருகிறது. மனுதாரர்/வாதியின் இரு

சகோதரிகளான ராமாத்தாள் மற்றும் பழனியம்மாள் ஆகியோர் வழக்கு தாக்கல் செய்யும்பொழுது ஏற்கனவே திருமணம் ஆகி அவரவர் தனித்தனியே வெவ்வேறு ஊர்களில் வசித்து வந்ததாலும், தீடீரென்று ஏற்பட்ட உடல் நலக்குறைவு ஆகியவற்றால் தொடக்கத்தில் வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க இயலாத நிலை ஏற்பட்டது. மேற்படி ராமாத்தாள் மற்றும் பழனியம்மாள் ஆகியோரை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி வேறு ஒரு மனு மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ளார்.

1.6). மேலும் மனு சொத்தில் எதிர்மனுவாதிகள் தென்வடல் 24 முழம், கிழமேல் 23 முழம் சதுரடி இடத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டுள்ளார்கள். எனவே பிரதிவாதிகளை ஆக்கிரமிப்பிலிருந்து வெளியேறும்படி கோரி பரிகாரம் கேட்க வேண்டியது அவசியமாகும். அதன் அடிப்படையில் வழங்கப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் அடிப்படையிலேயே நிறைவேற்று மனு தாக்கல் செய்ய இயலும். எனவே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை ஆக்கிரமிப்பிலிருந்து வெளியேற்றக்கோரி பரிகாரம் கேட்க வேண்டியது அவசியமாகும். எனவே மேற்படி சட்ட விரோதமாக எதிர்மனுவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்திலிருந்து அவர்களை வெளியேறுமாறு கூடுதலாக ஒரு பரிகாரத்தினை அசல் வழக்கில் சேர்க்க உரிய பரிகாரம் கோரி மனுதாரர்/வாதி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

2). எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:

2.1). மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது பொய்யானது. மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்யும் பொழுது உரிய தரப்பினர்களை சேர்க்காமலும் மற்றும் விளம்புகை பரிகரம் கோராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டு தற்போது மேற்படி வழக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் வழக்கை மேலும் தாமதபடுத்தும் எண்ணத்துடனும் மற்றும் வழக்கின் போக்கை மாற்றி அமைக்கும் வகையில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்

எனவே இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

2.2). எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 24 முழம், கிழமேல் 23 முழம் சதுரடி இடத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டுள்ளார்கள் என்று கோரியுள்ள அனைத்து சங்கதிகளும் முற்றிலும் பொய்யாகும் மேலும் அதனை மனுதாரர் இந்நீதிமன்றத்தின் முன்பு நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் மற்றும் இம்மனுவினை தாக்கல் செய்ய உண்மையான வழக்கு மூலத்தை குறிப்பிடாத காரணத்தினால் இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

<u>3). தீர்வுக்குரியப் பிரச்சனை:</u>

கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>4). பிரச்சனைக்குத் தீர்வு:</u>

4.1). அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது மனுதாரர்/வாதியின் தகப்பனார் காலமானதிற்கு பின்னிட்டு எந்தவித ஏற்பாடும் செய்யாமல் கூட்டுசுவாதீனத்திலேயே இருந்து வருகிறது என்றும், மனுதாரர்/வாதியின் இரு சகோதரிகளான ராமாத்தாள் மற்றும் பழனியம்மாள் ஆகியோர் வழக்கு தாக்கல் செய்யும்பொழுது ஏற்கனவே திருமணம் ஆகி அவரவர் தனித்தனியே வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறார்கள் என்றும், மனு சொத்தில் எதிர்மனுவாதிகள் தென்வடல் 24 முழம், கிழமேல் 23 முழம் சதுரடி இடத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற வேண்டி பரிகாரம் கோரவேண்டும் என்பதால் தாவாவில் உரிய திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4.2). மேற்படி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவர்களது எதிருரையில் வழக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் வழக்கை மேலும் தாமதபடுத்தும் எண்ணத்துடனும் மற்றும் வழக்கின் போக்கை மாற்றி

அமைக்கும் வகையில் இந்த மனுவை பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளார் என கூறியுள்ளனர்.

4.3). அசல் வழக்கானது மனுதாரர்/வாதி II அட்டவணை சொத்திற்கு உரிமையாளர் என விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியின் தாயார் இறப்பதற்கு முன்பே அவரது தகப்பனார் திரு.அய்யாக்கவுண்டர் கடந்த 09.01.2005 ம் தேதியன்று காலமாகிவிட்டார். பின்னிட்டு மனுதாரர்/வாதியின் தாயாரும் கடந்த 26.03.2012 ம் தேதியன்று காலமாகிவிட்டார். இருந்தபோதும் அவசர நிமித்தமும் எதிர்மனுவாதிகளின் ஆக்கிரமிப்புகள் மற்றும் தொடர் தொந்திரவுகளால் மனுதாரர்/வாதி இந்த வழக்கினை உரிய பரிகாரம் கோரி தாக்கல் செய்துவிட்டார்.

4.4). தற்பொழுது மேற்படி II வது அயிட்ட சொத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கை திருத்தம் செய்ய இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனு அவிடவிட் விவரத்தில் அவர் எந்த தேதியில் பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்ற சங்கதிகள் சொல்லப்படவில்லை. செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோர வேண்டும் எனில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் நாளில் இருந்து 3 வருடத்திற்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த மனு அபிடவிட்டில் எந்த தேதியில் பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என மனுதாரர்/வாதியால் சொல்லப்படவில்லை. இருப்பினும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆக்கிரமிப்பு வாதியால் தான் வைக்கப்பட்டது என்று எதிருரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் இங்கு தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் மேற்படி ஆக்கிரமிப்பை வாதி குறிப்பிடுவது போல் பிரதிவாதிகளால் செய்யப்பட்டதா அல்லது பிரதிவாதிகளால் சொல்லப்படுவது போல் வாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதா என்பதே ஆகும். மேலும் காலவரை சட்டத்தைப் பொருத்து அது சட்டம் மற்றும் சங்கதிகள் சார்ந்த எழுவினா என்பதால் இருதரப்பு ஆவணம் மற்றும் சாட்சியங்களை

பரிசீலனை செய்த பின்னிட்டுத்தான் முடிவுக்கு வரமுடியும். எனவே இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5). இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/N.Renuga
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

Sd/N.Renuga
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.No.4/2024 in
OS.192/2017 in
Dated:12.09.2024
DMC, Sulur.